மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஏற்கனவே உள்ள அறநிலையத் துறைச் சட்ட விதிகளின்படி இப்போது முதல் வாரத்தில் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுத்து வருகிறார்கள். எந்த இடத்திலாவது முதல் வாரத்தில் சம்பளம் கொடுக்காமல், தாமதம் ஏற்படுமானால் மேலதிகாரிகளின் கவனத்திற்கு அது கொண்டுவரப்படுமானால் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த அறநிலைய ஊழியர்கள் நமது முதலமைச்சரவர்களை சந்தித்து, அவர்களுக்கு இருக்கின்ற குறைகளைத் தீர்த்து, முதல் வாரத்திலேயே சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்களே. அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஆலய ஊழியர்கள் மாநாட்டில் சில கோரிக்கைகளை முதலமைச்சர் முன் வைத்தார்கள். சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு உடனடியாக உத்தரவும் இந்தத் துறையிலிருந்து பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆலயங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தாமதமாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று எதுவும் அந்த கோரிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எந்தக் கோவில் ஊழியர்களுக்காவது சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Sai Baba Temple, Mylapore.

* 293 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there is any proposal to take over the Sri Sai Baba temple in Mylapore, Madras under the administrative control of Hindu Religious and Charitable Endowments Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சென்னை, மயிலாப்பூரிலுள்ள "சாய்மந்திர்" எனப்படும் சாய்பாபா திருக்கோயிலை 1959-ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி ஓர்

1973 நவம்பர் 21]

அறநிலையம் என்று சென்னை இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர் 8—9—1965 அன்று அறிவிக்கை செய்தார். ஆனால் இதனை எதிர்த்து, இக்கோயிலைக் கட்டுவதற்குக் காரணமாக இருந்த அனைத்திந்திய சாய்பாபா சமாஜத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததின் விளைவாக துணை ஆணையரின் அறிவிக்கை செல்லாது என்று நீதிமன்றம் 23—6—1967-ல் தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பை எதிர்த்து செய்த மேல்முறையீடும் உயர்நீதி மன்றத்தால் 28—2—1973 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

Mylapore Kapaleeswarar temple trustees.

*294 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether Harijans have been nominated as trustees to the Kapaleeswarar temple at Mylapore, Madras?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

New Dairy Projects.

*295 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there is a proposal under the consideration of the Government to start a new Dairy Unit at Ambattur; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) "பால்வளப் பெருக்கத்திட்டத்தின் கீழ்" சென்னைக்கு இரண்டாவது பாற் பண்ணையொன்றை அம்பத்தூர் தொழிற் பேட்டையில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இந்தப் பாற் பண்ணை நாளொன்றுக்கு 2,00,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். தேசிய பாற் பண்ணை வளர்ச்சி வாரியத்தால் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு தமிழ்நாடு பால் வளர்ச்சிக் கழகம் எற்பளித்துள்ளது. தொடக்கப்பணிகளை முடித்து உற்பத்தியைத் தொடங்கத் தயாரான நிலையில் தருவதென்னும் அடிப்படையில் இப்பணி தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய பால் பண்ணை